மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழ் வளர்ப்பதைத் தடுக்கவில்லை. பண்டைக் காலத்தைப் போல் எந்த வகையில் வேண்டுமானாலும் அவர்கள் தமிழை வளர்க்கலாம். ஆனால், தமிழாசிரியர்களை உருவாக்க வேண்டுமென்றால் அவர்கள் கட்டுத் திட்டத்தின் கீழ் வரவேண்டும். தாங்களே தேர்வு நடத்தி, தாங்களே திருத்தி தாங்களே தேர்வு கொடுப்பது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவேதான் 1–4–1976–க்குப் பிறகு அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று திட்ட வட்டமாக அறிவித்திருக்கிறோம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மதுரைத் தமிழ்ச் சங்கம் எவ்வளவு ஆண்டு காலமாக புலவர் தேர்வுகளை நடத்திக் கொண்டிருக்கிறது ? என்ன நிபந்தனைகளை ஏற்க மறுக்கிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எத்தனை ஆண்டு காலமாகப் பயிற்றுவிக்கின்றார்கள் என்ற தகவல் இல்லை. வெளியிலிருந்து வந்து தேர்வை நடத்த வேண்டும். வினாத்தாள்கள் வெளியிலிருந்து குறிக்கப்பட வேண்டும். திருத்துபவர்கள் வெளியிலிருந்து வரவேண்டும். இப்படி மற்றைய கல்லூரிகளுக்கு உள்ள நிபந்தனைகளை இதற்கும் பல்கலைக் கழகம் விதிக்கிறது. அந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளாது அங்கே இருப்பவர்களே கேள்வி கேட்டு, அங்கே இருப்பவர்களே திருத்தி, அங்கே இருப்பவர்களே தேர்வு அளிக்கும் நிலையை பல்கலைக் கழகம் ஏற்றுக் கொள்ள முடியாது. பல்கலைக் கழக நிபந்தனைப்படி பொதுத் தேர்வில் கலந்து கொள்ள அவர்கள் முன்வராத காரணத்தால் அரசோ, பல்கலைக் கழகமோ அதற்கு அங்கீகாரம் அளிக்கவில்லை.

## பழகு தொழில் ஆசிரியர்கள்.

*685 வினா—திரு. என். டென்னிஸ் : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்வி இலாகாவில் "A" பிரிவில் பணிபுரியும் பணி பயிற்சி பட்டதாரி ஆசிரியர்களின் (Apprentice Teachers) பணிகளை நிரந்தரமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பழகு தொழில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டோரில் பெரும்பான்மையோருக்கு 1973 செப்டம்பர் திங்கள் 11-க்கு முன்பே முழுச் சம்பளப் பதவிகள் அளிக்கப் பட்டுவிட்டன. எஞ்சியுள்ளோர் அனைவரும் 1973 செப்டம்பர் திங்கள் 11 முதல் 'ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத்' திட்டப் பதவிகளில் அமர்த்தப்பட்டு முழுச்சம்பளம் பெற்று வருகின்றனர். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக்குழு அரசுப் பள்ளி ஆசிரியர் பதவிகளுக்கு ஆள் எடுக்கும்பொழுது விண்ணப்பித்து, அக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் அவர்கள் முறையாக நியமனம் செய்யப்படுவர். இவ்விதி, அரசுப் பள்ளிகளில் உள்ள எல்லா பட்டதாரி ஆசிரியர்களுக்கும் பொருந்தும் பொதுவான விதியாகும்.

1974 மார்ச் 30]

திரு. சோ. அழகர்சாமி: இந்தப் பணி பயிற்சி பட்டதாரி ஆசிரியர்கள் தமிழ்நாடு பூராவும் எவ்வளவு பேர்கள் பணியாற்றிவருகிறார்கள் ? அவர்களில் நிரந்தரமாக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்கள் ? இன்னும் நிரந்தரமாக்கப்பட வேண்டியிருப்பவர்கள் எத்தனை பேர்கள் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தொழில் பழகு ஆசிரியர்கள் திட்டத்தின்கீழ் 1970–71, 1971–72, இந்த இரண்டு ஆண்டு களில் 5,746 பேர்களுக்கு வேலை அளிக்கப்பட்டிருக்கிறது. ஹயர் கிரேட் ரூ. 100, செகண்டரி கிரேட் ரூ. 125, பி.டி. ரூ. 175 என்று கொடுத்தோம். 1973-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11-ம் நாள் வரை நாலாயிரத்துச் சில்லரைப் பேர்கள் முழுச் சம்பளமுடையவர்களாக நியமிக்கப்பட்டி ருக்கிறார்கள். 'ஐந்து லட்சப் பதவித் திட்டத்தின்கீழ்' எஞ்சியவர்களை ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை இருக்கிறது. இப்போது தொழில் பழகு ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் அப்படிப்பட்ட நிலை வருவதற்கில்லை. எல்லோருக்கும் முழுச் சம்பளம் கொடுக்கும் சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.

திரு. என். டென்னிஸ்: அப்ரன்டிஸ் டீச்சர்ஸ் ஆகவும், 10 (ஏ) (1)-ல் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களாகவும் பணியாற்றி வரும் பலரும் ஐந்து ஆண்டுகளாக வேலை செய்துகொண்டு வந்தும் அவர்கள் நிரந்தர மாக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்களில் சிலருக்கு ஓவர் ஏஜ் ஆகி யிருக்கிறது. ஆகவே இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பணி புரியும் எல்லா ஆசிரியர்களையும் நிரந்தரமாக்குவதற்கு அரசிடம் ஏதாவது திட்ட முள்ளதா? தனியார் பள்ளிகளில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து வேலை செய்தால் அவர்கள் நிரந்தரமாக்கப்படும் ஒரு நிலை இருக்கிறது. எனவே அந்த முறையை இங்கும் கையாளப்பட்டு அந்த ஆசிரியர்கள் நிரந்தர மாக்கப்படுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போதுள்ள விதிப்படி அவர்கள் சர்வீஸ் கமிஷன் மூலம்தான் நியமனம் பெறவேண்டும். அப்போதுதான் அவர்கள் நியமனம் ஊர்ஜிதப்படுத்தப்படும். வயது அதிகமாகியிருக்கிறது என்றால், ஓவர் ஏஜ் என்றால், தனித்தனியாக விண்ணபித்து அதற்கு விதிவிலக்கு கேட்டு பெற்றுக்கொள்ளலாம்.

திரு. ந. சோமசுந்தரம்: அரசாங்க உயர்நிலைப்பள்ளிகளில் "ஏ" விங்க், "பி" விங்க் என்று இருக்க வேண்டிய அவசியம் என்ன? அதனால் சில நிர்வாக சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனவே இப்படி இருக்கக்கூடிய இந்த இரண்டு விங்க்ஸ் என்பதைக் கலைக்க அரசு வழி வகை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்: ஏற்கெனவே ஜில்லா போர்டின் கீழ் இருந்த பள்ளிக்கூடங்கள் "பி" விங்க் ஆகிறது. 1966-ல் இருந்து 1970 வரையில் அவைகள் தனியாக வைத்து கண் காணிக்கப்பட்டன. 1970-ல் அவைகளை எல்லாம் அரசு ஏற்றுக்கொள்வது

என்று முடிவு செய்து அதுவரை இருந்தது "பி" விங்க் என்றும் பிறகு ஏற்படுபவைகள் "எ" விங்க் என்றும் வைத்திருக்கிறார்கள். இரண்டையும் ஒன்றாக ஆக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் இரு சாராரும் ஒத்துக்கொள்ளாததால் ஒருவரும் பாதிக்கப்படாத முறையில் எதைக் கையாண்டால் அந்த நிலை நாளுக்குநாள் மாறி ஒரு காலத்தில் எல்லோரையும் "எ" விங்க் ஆக்கும் முறையைக் கையாளலாம் என்பதைப்பற்றி கல்வித் துறையினர் ஆராய்ந்து வருகிறார்கள். விரைவில் முடிவு எடுக்கப்படும்.

பள்ளி அபிவிருத்தி கூட்டங்கள்.

*686 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு கல்வி சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளி அபிவிருத்திக் கூட்டம் (School Improvement Conference) ஆண்டுதோறும் கல்வி இலாகா நடத்தி வருகிறதா ?

(இ) ஆம் எனில், 1972–73, 1973–74 கல்வி ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் எங்கெங்கு இந்தக் கூட்டம் நடைபெற்றது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) 1972–73ஆம் ஆண்டில் பள்ளி அபிவிருத்திக் கூட்டங்கள் உடன்குடி, நாசரேத், வள்ளியூர் என்ற இடங்களில் நடைபெற்றன. 1973–74-ல் ஷை கூட்டங்கள், திருச்செந்தூர், ஆழ்வார் திருநகரி, புதுக்கோட்டை, கடையம், திருவம்பலபுரம், பாப்பன்குளம், சேரன்மாதேவி, விக்கிரமசிங்கபுரம் மற்றும் தூத்துக்குடி என்ற இடங்களில் நடைபெற்றன.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : இந்த கான்பரன்ஸில் எடுக்கப்பட்ட முடிவுகள் யாவை ? அதனால் ஏற்பட்ட நன்மைகள் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அபிவிருத்திக் கூட்டங்கள் என்று சொல்லி ஆங்காங்கு பொருள்காட்சிகள் எல்லாம் வைக்கிறார்கள். பொது மக்கள் ஆங்காங்கிருக்கிற பள்ளிகளுக்குத் தேவைப்படுகிற நிலங்களைக் கொடையாக வழங்கவும், பள்ளிக்கூடங்களில் பயன்படுத்தும் கருவிகள் போன்றவற்றை தருவதும், நிதி உதவி ஆகியவற்றையெல்லாம் தருகிறார்கள். அந்த வகையில் ஒன்பது ஆண்டுகள் இந்த பள்ளி அபிவிருத்திக் கூட்டங்கள் நடத்தியதின் மூலம் 513 பள்ளி அபிவிருத்திக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. 12 கோடி 96 லட்சம் ரூபாய் மதிப்புள்ள நன்கொடைகள் பல்வேறு வகைகளில் பெறப்பட்டிருக்கின்றன.